©
GOVERNMENT OF TAMIL NADU
2024

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 3.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 55A] சென்னை, வியாழக்கிழமை, பிப்ரவரி 22, 2024
மாசி 10, சோபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2055

# பகுதி IV—பிரிவு 1

## தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

| | பக்கங்கள் |
|---|---|
| சட்டமுன்வடிவுகள்: | |
| எண். 19/2024—தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டம். .. | 1–6 |
| எண். 20/2024—தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் .. | 7–8 |



DTP—Ex-IV-1 (55A)

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2024

## 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கை வாயிலாகக் குறிப்பிடும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

159 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 159 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:—

"159. **தொழில் உரிமம் வழங்குதல்.**—(1) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, செயல் அலுவலரால் வழங்கப்பட்ட ஒரு தொழில் உரிமமின்றி ஊராட்சியின் வரம்பிற்குள், பொது அல்லது தனியாரின் இடம் எதிலும், அவ்வப்போது அரசினால் அறிவிக்கப்படலாகும் தொழில் அல்லது வணிகத்தின் வகை எதையும் நபரெவரும் மேற்கொள்ளுதல் கூடாது மற்றும் அத்தகைய தொழில் உரிமமானது, வகுத்துரைக்கப்படலாகும் முறையில் புதுப்பிக்கப்படலாம்:

வரம்புரையாக, அரசு அல்லது மைய அரசின் அல்லது 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) கீழ் நிறுவப்பெற்ற அல்லது நிறுவப்பெற்றதாக கருதப்படும் ஒரு சந்தைக் குழுவின், பயன்பாட்டில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இடம் எதனையும் பொறுத்த வரையில் தொழில் உரிமம் அவசியமானது ஆகாது.

(2) தொழில் உரிமத்திற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து, அத்தகைய படிவத்தில் மற்றும் அத்தகைய முறையில் செயல் அலுவலரிடம் செய்யப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய விண்ணப்பத்தை பெற்றதன் பேரில், விண்ணப்பமானது முறையாக இருப்பின், செயல் அலுவலரானவர், தொழில் உரிமத்தை வழங்குதல் வேண்டும்:

வரம்புரையாக, தொழில் உரிமம் வழங்குவதற்கான விண்ணப்பம் எதுவும், கேட்பதற்கான நியாயமான வாய்ப்பொன்று வழங்கப்படாமல் மறுக்கப்படுதல் ஆகாது:

மேலும் வரம்புரையாக, தொழில் உரிமத்திற்கான விண்ணப்பமானது, அதனைப் பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாள்கள் கால அளவிற்குள் தீர்வு செய்யப்படாதிருப்பின், அதன்படி விண்ணப்பிக்கப்பட்ட தொழில் உரிமமானது, கூறப்பட்ட காலஅளவு முடிவுறுவதன் பேரில் வழங்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

3. முதன்மைச் சட்டத்தின் 160 ஆம் பிரிவில், ‘‘ஊராட்சி ஒன்றிய குழு’’ எனும் சொற்றொடருக்காக, ‘‘ஆய்வாளர்’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 160 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவில்,– 161 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (2) ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) (4) ஆம் உட்பிரிவில், ‘‘ஊராட்சி ஒன்றிய குழு’’ எனும் சொற்றொடருக்காக, ‘‘ஆய்வாளர்’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

5. முதன்மைச் சட்டத்தின் II ஆம் இணைப்புப் பட்டியலில், (3) ஆம் நிரலிலுள்ள உள்ளீட்டிற்காக, அதனின் (1) ஆம் நிரலிலுள்ள 159 ஆம் பிரிவிற்கு எதிரே, பின்வரும் உள்ளீடானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– II ஆம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

“தொழில் உரிமம் இல்லாமல் தொழில் அல்லது வணிகம் எதனையும் மேற்கொள்ளுதல்.’’.

6. முதன்மைச் சட்டத்தின் III ஆம் இணைப்புப் பட்டியலில், (3) ஆம் நிரலிலுள்ள உள்ளீட்டிற்காக, அதனின் (1) ஆம் நிரலிலுள்ள 159 ஆம் பிரிவிற்கு எதிரே, பின்வரும் உள்ளீடானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:- III ஆம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

“தொழில் உரிமம் இல்லாமல் தொழில் அல்லது வணிகம் எதனையும் மேற்கொள்ளுதல்.’’.

## நோக்கக் காரண விளக்கவுரை.

ஆறாவது மாநில நிதி ஆணையமானது, ஊறு விளைவிக்கும் மற்றும் ஆபத்தான தொழில் உரிமத்தின் பெயரிடுமுறையை தொழில் உரிமம் என மாற்றியமைக்க வேண்டுமென பரிந்துரை செய்துள்ளது. மேலும், 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) வகைமுறைகள், 2018–ஆம் தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2018) நோக்கத்திற்கேற்ப, அதாவது "வணிகம் செய்வதை எளிமையாக்க", அரசு, அதில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 21/1994–இன் 160–ஆம் பிரிவின்கீழ் அனுமதி வழங்குவதற்கு ஆய்வாளருக்கு அதிகாரமளிக்க முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க, அரசு, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 21/1994–ஐ தகுந்தவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**இ. பெரியசாமி,**
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 2ஆம் பிரிவானது, அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, விதிகளை செய்வதற்கு, அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே மற்றும் தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**இ. பெரியசாமி,**
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை—9,
2024 பிப்ரவரி 22.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2024

## 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/1989.

33—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 33—ஆம் பிரிவில், (1)—ஆம் உட்பிரிவில் உள்ள வகைமுறையில், "பன்னிரண்டு ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள்" எனும் சொற்றொடருக்காக, "பதின்மூன்று ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

செல்லுந்தன்மை.

3. முதன்மைச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளிலிருந்தும் மற்றும் அது முதற்கொண்டும், சந்தைக் குழுக்களின் ஒரு தனி அலுவலரின் அதிகாரங்களை செலுத்தும் மற்றும் செயற்பணிகளை நிறைவேற்றும் நபர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான, முதன்மைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி அத்தகைய தனி அலுவலர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் தொடங்கியும், ***தமிழ்நாடு அரசிதழில்*** இந்தச் சட்டம் வெளியிடப்படும் தேதியுடன் முடிவடையும் காலஅளவின் போது கூறப்பட்ட தனி அலுவலர்களால் செய்யப்பட்ட செயல் எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான, முதன்மைச் சட்டத்தின்படி செல்லுந்தன்மையுடன் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைப்பொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 33–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவானது, ஒரு புதிய சந்தைக்குழு அமைக்கப்படுவது நிலுவையில் இருக்கும்போது, சந்தைக்குழு ஒன்றின் அலுவல்களை மேலாண்மை செய்வதற்கு மொத்தத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கு தனி அலுவலர் ஒருவரை பணியமர்த்தம் செய்ய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. கூறப்பட்ட வகைமுறையின் விளைவாக, மாநிலத்தில் சந்தைக் குழுக்களின் அலுவல்களை மேலாண்மை செய்வதற்கு பணியமர்த்தப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்காலமானது, கூறப்பட்ட சட்டத்தின் 33–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் வகைமுறையை அவ்வப்போது திருத்தம் செய்வதன் மூலம், கூறப்பட்ட மூன்று ஆண்டுகள் காலத்திற்கு அப்பாலும் நீட்டிக்கப்பட்டது. தமிழ்நாடு சட்டம் 6/2023–ன் மூலம் திருத்தம் செய்யப்பட்டவாறான கூறப்பட்ட வகைமுறையானது, தனி அலுவலர்களின் பதவிக் காலத்தினை மொத்தமாக பன்னிரண்டு ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள் கால அளவு வரையிலும் நீட்டிப்பு செய்ய அரசுக்கு இயலச்செய்கிறது.

2. 26 சந்தைக்குழுக்களில், திருச்சிராப்பள்ளி மற்றும் கடலூர் சந்தைக் குழுக்களைத் தவிர 24 சந்தைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். கூறப்பட்ட 24 சந்தைக்குழுக்களில், (தேனி சந்தைக் குழு நீங்கலாக) 23 சந்தைக்குழுக்களுக்கு தலைவர் மற்றும் துணைத்தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் மற்றும் கூறப்பட்ட 23 சந்தைக் குழுக்களில் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

3. எனவே (திருச்சிராப்பள்ளி, கடலூர், தேனி சந்தைக்குழுக்கள் நீங்கலாக) 23 சந்தைக் குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலமானது 30.11.2020–லிருந்து, தொடர்புடைய சந்தைக்குழுக்களின் பொறுப்பினை உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வதற்கு முந்தைய தேதி வரையிலும் நீட்டிக்கப்பட்டது. மேலும் திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் தேனி சந்தைக் குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலமானது 30.11.2020–லிருந்து 29.11.2021 வரையில் நீட்டிக்கப்பட்டது.

4. இதற்கிடையே, 2021–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 23–ஆம் நாளன்று கூறப்பட்ட 24 சந்தைக்குழுக்களுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் திரும்பப் பெறப்பட்டனர் மற்றும் திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் தேனி சந்தைக்குழுக்கள் நீங்கலாக, மேற்கூறிய 23 சந்தைக்குழுக்களுக்கும், தனி அலுவலர்கள் ஓராண்டு கால அளவிற்கு அதாவது 23.07.2021 முதல் 22.07.2022 வரையிலும் பணியமர்த்தப்பட்டனர். கூறப்பட்ட 23 சந்தைக் குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலமானது 23.07.2022 முதல் 22.07.2023 வரையிலும், மேலும் 23.07.2023 முதல் 22.07.2024 வரையிலும் நீட்டிப்பு செய்யப்பட்டது.

5. திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் தேனி ஆகிய சந்தைக்குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலமானது 30.11.2022லிருந்து 29.11.2023 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் தேனி ஆகிய சந்தைக்குழுக்களின் தனி அலுவலர்களின் நீட்டிக்கப்பட்ட பதவிக்காலமானது 29.11.2023 அன்றுடன் நிறைவடைந்துள்ளது மற்றும் கூறப்பட்ட சந்தைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு மேலும் சிறிது காலம் தேவைப்படுகிறது மற்றும் கூறப்பட்ட மூன்று சந்தைக்குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை 29.11.2023–க்கு அப்பால் மேலும், ஓராண்டு காலத்திற்கு அல்லது கூறப்பட்ட சந்தைக்குழுக்களின் மறு அமைத்துருவாக்கம் செய்யப்படுகின்ற வரையிலும் இவற்றில் எது முந்தையதோ அதுவரையில் நீட்டிக்க வேண்டியது ஒரு கட்டாயத் தேவையாகிறது. எனவே, மேற்சொன்ன நோக்கத்திற்காக, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 27/1989–ஐ தக்கவாறு திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்துள்ளது.

6. மேற்கண்ட முடிவிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டமானது தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை பன்னிரண்டு ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்களுக்குப் பதிலாக பதின்மூன்று ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கும் வகையில் திருத்தப்படுதல் வேண்டும். திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் தேனி ஆகிய சந்தைக்குழுக்களின் தனி அலுவலர்கள், தொடர்ந்து கொண்டிருக்கும் நடவடிக்கையானது 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 ஆம் தேதிக்குப் பின்னர், ஆளுநரிடம் இருந்து ஒப்புதல் பெறப்படும் வரை செல்லுந்தன்மையுடையதாகுதல் வேண்டும்.

7. இந்தச் சட்ட முன்வடிவானது மேற்கண்ட முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**எம். ஆர். கே. பன்னீர்செல்வம்**
*வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 பிப்ரவரி 22.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.